Register No. [ ]

**FA6A** **5605–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss about the financial relations between the Central and State Governments.

   நடுவன் மற்றும் மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதிப் பங்கீட்டு உறவுகளைப் பற்றி விவாதிக்க.

2. Examine the scope of Article 356 after Bommai's case.

   பொம்மை வழக்கிற்கு பிந்தைய உறுபு 356-ன் நோக்கெல்லையை ஆய்வு செய்க.

3. Examine the doctrine of pith and substance as laid down by the Indian Supreme Court.

   இந்திய உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள 'மையக்கருப்பொருள் கோட்பாட்டை'-ப் பற்றி ஆய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the powers of the President of India.

   இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைப் பட்டியலிடுக.

5. Briefly discuss about the jurisdiction of the Supreme Court.

   உச்ச நீதிமன்றத்தின் நீதி வரம்பெல்லையைப் பற்றி சுருக்கமாக விவாதிக்கவும்.

6. Narrate the present state of Art 370 of the Constitution.

   அரசியலமைப்புச் சட்டத்தின் உறுபு 370-ன் தற்போதைய நிலையை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Writ of Quo Warranto.

தகுதி வினவும் நீதிப்பேராணை.

(b) Composition of Rajya Sabha.

ராஜ்ய சபாவின் கட்டமைப்பு.

(c) Single member bill.

தனி நபர் சட்ட முன்வடிவு.

(d) Vote on account.

இடைக்கால மானிய கோரிக்கை.

(e) Comptroller and Auditor General of India.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர்.

(f) Article 368.

உறுப்பு 368.

(g) Trade and Commerce Rights.

தொழில் மற்றும் வணிக உரிமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Government of India entered into a treaty with USA on a subject matter which is in the State List under the Indian Constitution. Decide on the Constitutional validity of the treaty entered into by the Union Government.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாநில பட்டியலில் உள்ள ஒரு பொருளின் மீது இந்திய அரசு அமெரிக்க நாட்டுடன் ஒரு உடன்படிக்கையில் கையொப்பம் இடுகிறது. இந்திய அரசு செய்துள்ள இவ்வுடன்படிக்கை அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை முடிவு செய்க.

9. Mr. X was elected to the state legislative assembly as MLA representing a political party. Later he was expelled from the party. Later he joined another political party. Is he disqualified under the tenth schedule of the Indian Constitution. Decide.

திரு. X என்பவர் ஒரு அரசியல் கட்சி சார்பாக சட்ட சபைக்கு சட்ட மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். பின்னர் அவர் வேறு ஒரு அரசியல் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பத்தாம் அட்டவணையின் கீழ் தகுதி இழந்தவரா? தீர்மானிக்கவும்.



10. A State in India enacted a law to limit the rate of interest recoverable by money lenders on any loan. RBI challenged the validity of the law on the ground that the matter is related to 'Promissory–Notes', a central subject. Decide the validity of the State law.

ஒரு மாநில அரசானது கடன் தொகை பெறுபவர்களிடமிருந்து பெறப்படும் கடனுக்கான வட்டி விழுக்காட்டை குறைப்பதற்காக ஒரு சட்டத்தை இயற்றியது. இந்திய ரிசர்வ் வங்கி இந்தச் சட்டத்தின் செல்லுந்தன்மையை வினவி இது மத்திய பட்டியலில் உள்ள கடனுறுதிச் சீட்டு தொடர்புடையது என எதிர்ப்பு தெரிவித்தது. மாநில அரசு இயற்றி இருக்கும் சட்டத்தின் செல்லுந்தன்மையை முடிவு செய்க.